E.A.No. 15/2022 IN  E.P.No: 34/2019

சார்பு நீதிமன்றம், விருதுநகர்

நாள்.06.08.2025

ம.சா.1 – ரிஜின்                                    த/பெ – எஸ்தப்பென்ஸ்

**எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை –**

**1.** மனு சொத்தை சாந்தி என்பவரிடம் நான் 2016ம் வருடம் கிரையம் பெற்றுள்ளதால் மனு சொத்தை பொறுத்து நிறைவேற்றுதல் நடவடிக்கையில் இருந்து விடுவிக்க கோரி மனு தாக்கல் செய்துள்ளேன். மனு சொத்து எனக்கு பாத்தியப்பட்டது என விளம்புகை பரிகாரம் கோரவில்லை என்றால் சரிதான். சர்வே எண்.374ல் உள்ள மனு சொத்தை கிரையம் பெற்றேன். நான் மனு சொத்தை கிரையம் பெறுவதற்கு முன்பு வில்லங்கம் போட்டு பார்த்தேன். மேற்படி வில்லங்க சான்றை இவ்வழக்கில் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் அது பற்றி ஞாபகமில்லை. நான் தற்போது என்.ஜி.ஓ.காலனி, பாரதி நகரில் குடியிருந்து வருகிறேன். மனு சொத்தை சாந்தி தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்திடம் இருந்து கிரையம்  பெற்றதாக சொல்லி கிரைய ஆவணத்தை தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன்.

2. மனு சொத்து தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்திற்கு எவ்வாறு பாத்தியம் என்று எனக்கு தெரியுமா என்றால் எனக்கு தெரியும், 1992ம் வருடம் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்திற்காக மேற்படி நிலம் அரசால் கையகப்படுத்தப்பட்டு அதன் உரிமையாளர்களுக்கு உரிய இழப்பீடு வழங்கப்பட்டுள்ளது. தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் மனு சொத்தினை

யார், யாரிடம் இருந்து கையகப்படுத்தினார்கள் என்று தெரியுமா என்றால் அந்த விபரத்தை நான் தெரிந்து கொள்ளவில்லை. 07.08.2015ம் தேதி சாந்தி தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்திடம் இருந்து கிரையம் வாங்கியதற்கான கிரைய ஆவணம் ம.சா.ஆ.3 என்றால் சரிதான். ம.சா.ஆ.3 கிரைய ஆவணத்தின் படி நான் மேற்படி சொத்தை 13.01.2016ம் தேதி சாந்தியிடம் கிரையம் பெற்றேன் என்றால் சரிதான்.

3. சாந்தி 2015ம் வருடமும், நான் 2016ம் வருடமும் மனு சொத்தை கிரையம் பெற்ற போது மனு சொத்து சம்மந்தமாக 2011ம் ஆண்டு முதல் நீதிமன்றத்திற்கு வழக்கு நிலுவையில் உள்ள விபரத்தை தெரிந்து கொண்டேனா என்றால் தெரிந்து கொள்ளவில்லை. மனு சொத்தை நீதிமன்ற ஆணையர் அளவீடு செய்ய வரும் போது நான் அங்கு இல்லை. மனு சொத்தை தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் நில ஆர்ஜிதம் செய்யும் போது சொத்தின் உரிமையாளர்கள் என வேல்முருகன், இளவர் செந்தில்வேலன், பரதன், உமாகாந்தன், தட்சிணாமூர்த்தி ஆகியோர்களுக்கு இழப்பீடு வழங்கியுள்ளதாக எனது மனு மற்றும் முதல் விசாரணையில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான்.

4. மனு சொத்து ஆதியில் ஆத்திகுடும்பன் என்பவருக்கு பாத்தியப்பட்ட சொத்து என்பது எனக்கு தெரியும் என்றால் தெரியாது, அது தவறான தகவல் என கருதுகிறேன். மனு சொத்து 1915 மற்றும் 1916ம் வருட ஆவணங்களின் படி மனு சொத்து ஆத்திக்குடும்பனுக்கு பாத்தியப்பட்ட சொத்து என எனக்கு நன்கு தெரிந்தும் வழக்கிற்காக பொய்

சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. மேற்படி விபரங்கள் குறித்து நான் கிரையம் பெற்ற சாந்தியை சாட்சியாக விசாரணை செய்தால் தெரியவரும் என்றால் அவ்வாறு விசாரிக்க தேவையில்லை.

5. எனக்கு தெரியாத விசயங்களை குறித்து நான் தாக்கல் செய்துள்ள நிரூபண வாக்குமூலத்தில் பாரா-6ல் சொல்ல வேண்டிய காரணம் என்னவென்றால் சட்ட கருத்துரையின் அடிப்படையில் சொல்லியுள்ளேன். ம.சா.ஆ.1 ஆவணம் நான் தான் தாக்கல் செய்தேன். ம.சா.ஆ.1 ஆவணத்தில் முத்துநாடார் மகன் வேல்முருகனுக்கு பாத்தியப்பட்டதாக உள்ளது என்றால் சரிதான். சாந்தியிடம் மனு சொத்தை கிரையம் பெற்ற போது மேற்படி விபரத்தை பார்க்கவில்லை. ம.சா.ஆ.1 ஆவணத்தில் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் நில ஆர்ஜிதம் செய்தற்கான இழப்பீடு தொகையை வேல்முருகன், இளவர் செந்தில்வேலன், பரதன், உலகநாதன், தட்சிணாமூர்த்தி ஆகியோர்க்கு இழப்பீடு கொடுத்துள்ளதாக உள்ளது என்றால் சரிதான்.

6. மேற்படியார்கள் அனைவரும் முத்துநாடார் என்பவரின் குழந்தைகள் என உள்ளது என்றால் சரிதான். மனு சொத்தின் உண்மையான உரிமையாளர் ஆத்திக்குடும்பன் வகையறாக்கள் என இருக்கும் போது தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் நில ஆர்ஜிதம் செய்ததாக நாடார் சமுதாயத்தினை சேர்ந்தவர்களுக்கு இழப்பீடு வழங்கியது ஒரு மோசடியான செயல் என்றால் சரியல்ல. மனு சொத்தினை நானோ எனது முந்தைய கிரைய தாரர் சாந்தியோ கிரையம் பெறும் போது மனு சொத்தின்

உண்மையான உரிமையாளர்களான ஆத்திக்குடும்பத்தின் வகையறாக்கள் காவல்நிலையத்தில் புகார் கொடுத்து அது சம்மந்தமான விசாரணை நடைபெற்றது எனக்கு தெரியும் என்றால் சரியல்ல.

7. மனு சொத்தை உண்மையான உரிமையாளர்களிடம் இருந்து நில ஆர்ஜிதம் செய்யாமல் சட்ட விரோத நபர்களிடம் இருந்து நிலம் ஆர்ஜிதம் செய்யப்பட்டுள்ளதால் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் ஆர்ஜிதம் செய்துள்ளது மோசடியானது என்றாலும், அதன் அடிப்படையில் சாந்தியும், நானும் கிரையம் பெற்றது சட்ட விரோதம் என்றால் சரியல்ல. மனு சொத்தை சாந்தி கிரையம் பெற்றதாக உள்ள ம.சா.ஆ.3 ஆவணத்தை படித்து பார்த்தேனா என்றால் படித்து பார்த்தேன். ம.சா.ஆ.3 ஆவணத்தில் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தால் 25.04.1981 ஒரு தீர்மான எண். 120 நிறைவேற்றப்பட்டதாக உள்ளது என்றால் சரிதான்.

8. 25.04.1981ம் தேதி நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தை நான் பார்த்தேனா என்றால் அது பற்றி ஞாபகமில்லை. மேற்படி தீர்மானத்தை பார்த்தால் எது சம்மந்தமாக, என்ன வகையான தீர்மானம் என தெரியவரும் என்றால் சரிதான். நான் தாக்கல் செய்த ம.சா.ஆ.3 ஆவணத்தின் 25.04.1981ம் தேதி தீர்மானம் போடப்பட்டதாகவும், மனு சர்வே எண்ணில் மற்ற கிரையதாரர்கள் கிரையம் பெற்ற கிரைய ஆவணங்களில் தீர்மானம் 29.11.2012ம் தேதி போடப்பட்டதாக உள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. நான் கிரையம் பெற்ற மனு சொத்தை பொறுத்து விளம்புகை பரிகாரம் கோராமல் நிறைவேற்று மனுவில் இருந்து மனு சொத்தை

விடுவிக்க கோரி தாக்கல் செய்துள்ள இம்மனு சட்டப்படி ஏற்றுக்கொள்ளகூடியதல்ல என்றால் சரியல்ல.

9. மனு சொத்தை நான் கிரையம் பெற்ற தேதியில் மனு சொத்தில் உரிமை பிரச்சனை உள்ளது என்று எனக்கு தெரியும் என்றால் சரியல்ல. நான் கிரையம் பெறும் போது மனு சொத்தில் உரிமை பிரச்சனை இருப்பது நன்கு தெரிந்து கொண்டு தற்போது அதை மறுத்து சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் கிரையம் பெற்ற மனு சொத்தின் உரிமை பிரச்சனை உள்ளது குறித்து தனியாக வழக்கு தாக்கல் செய்ய வேண்டும் என்றும், நிறைவேற்று மனுவில் அது குறித்து கோரிக்கை முன்வைக்க முடியாது என்றால் சரியல்ல. தாவா சொத்து ஆத்திக்குடும்பனுக்கு பாத்தியப்பட்டது என்று நன்குதெரிந்தும் அரசு நிறுவனத்திடம் இருந்து கிரையம் வாங்கினால் தப்பி விடலாம் என கிரையம் பெற்றேன் என்றால் சரியல்ல.

10. உரிமை பிரச்சனை உள்ள மனு சொத்தை எனக்கு பாத்தியப்பட்டது என்று விளம்புகை பரிகாரம் கோராமல் நீதிமன்ற நடவடிக்கையில் இருந்து விலக்கு அளிக்கக்கூடிய பரிகாரம் சட்டப்படி நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. தாவா சொத்தில் வீடு கட்டி குடியிருந்து வருவதற்கு கட்டிட வரைபட அனுமதி தாக்கல் செய்யவில்லை. மேற்படி வீட்டிற்கான தீர்வை ரசீது, மின் இணைப்பு ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. மனு சொத்து எனக்கு பாத்தியப்பட்டது என விளம்புகை பரிகாரம் கோராமல் நான்

தாக்கல் செய்துள்ள இம்மனு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.